

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2025) சென்னையில் நடைபெற்ற ரமேஷ் அவர்களின் மகள் நிரோஷினி – விஷ்ணுபிரசாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதக்கரம்” 250வது நாள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் உணவு வழங்கினார்!




சென்னை, அக்.28-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் “அன்னம் தரும் அமுதக் கரங்கள்” மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி , 30வது நாள் உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் , 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி , 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணிய் , 100வது நாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு , 125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், 150வது நாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், 175வது நாள் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், 200வது நாள் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், 225வது நாள் சட்டம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 250வது நாளான நேற்று (27.10.2025), கொளத்தூர் மேற்கு பகுதி, 64 அவது வார்டு கொளத்தூர், ஜி.கே.எம். காலனி 36வது கட் ரோடு, லஷ்மி மருந்தகம் அருகில் மற்றும் 64வது வார்டு, கொளத்தூர் மெயின் ரோடு, டீச்சர் கில்டு சாலை, மூகாம்பிகை அம்மன் கோயில் அருகில் ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.


இச்சிறப்புமிக்க “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தினந்தோறும் 225 நாட்களுக்கும் மேல் 450க்கும் மேற்பட்ட இடங்களில் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

“அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டமானது நேற்றுடன் (27.10.2025) தற்பொழுது 250 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் (திரு.வி.க. நகர்) தாயகம் கவி, (வில்லிவாக்கம்) வெற்றி அழகன், (அம்பத்தூர்) ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா,

பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன், நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.சந்துரு, மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி. சரிதா மகேஷ்குமார், கூ.பீ. ஜெயின், மாமன்ற உறு ப்பினர்கள் திருமதி.தாவுத்பீ, திருமதி.சுதா தீனதயாளன், திருமதி. யோகபிரியா, திருமதி. ராஜேஷ்வரி ஸ்ரீதர், திருமதி. நாகவள்ளி, வட்டச் செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், எஸ்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி மாவட்ட துணைத் தலைவர் க.மதியழகன் இல்ல திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை,மாநில துணை தலைவர் எஸ்.மோகன், மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு மற்றும் துணை அமைப்பாளர்கள் கோ.சு.கருணாநிதி,வே.மாயா,பி. கோவிந்த் கலந்து கொண்டனர்.




வடகிழக்குப் பருவமழையையொட்டி, நேற்று (27.10.2025) அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நீலாங்கரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எஸ். அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., மண்டல கண்காணிப்பு அலுவலர் தெ.பாஸ்கர பாண்டியன், வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டல கண்காணிப்பு அலுவலர் இரவிக்குமார் , மண்டலக்குழுத் தலைவர்கள் வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், நிலைக் குழு தலைவர் .விஸ்வநாதன் மற்றும் முக்கிய சேவை துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாமல்லபுரத்தில் இன்று (28–ஆம் தேதி) காலை வருகை தரும்

# தலைவர் - முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



மாமல்லபுரம், அக்.28-

மாமல்லபுரத்தில் இன்று 28-ஆம் தேதி காலை நடைபெறும் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஒட்டல் அருகில், காலை 8.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

தி.மு.கழகத்தின் சார்பில் என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டம் மாமல்லபுரம் பூஞ்சேரியில் உள்ள கான்ஃப்ளுயன்ஸ் ஹால் கூட்ட அரங்கில் இன்று 28-ஆம் தேதி காலை 9.00 மணி அளவில் விழா நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் துணை முதல்வர், அமைச்சர்கள், கழக பொதுச் செயலாளர், கழக பொருளாளர், கழக துணைப் பொதுச் செயலாளர்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் - தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, இன்று காலை 8.30 மணியளவில், மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஒட்டல் அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# ‘டெங்கு’ காய்ச்சல் பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, அக். 28 -

‘டெங்கு’ காய்ச்சல் பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, நேற்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஏ.டி.ஸ். கொசு என்பது நன்னீரில் ஏற்படுவது. வீட்டைச் சுற்றி எப்போதெல்லாம் மழைநீர் தேங்குகிறதோ அந்த கொசு உற்பத்தி ஆகும். தற்போது மழைக்காலம் என்பதால் கூடுதலாக உற்பத்தி ஆகும். சென்னை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழப்புகள் என்பது 2 வருடங்கள் தான் அதிகபட்ச உயிரிழப்பு. 2012 இல் 66 பேர், 2017 இல் 65 பேர் இறந்து இருக்கிறார்கள்.

இந்த அரசு அமைந்ததற்குப் பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளில் ஒற்றை இலக்கத்திலேயே டெங்கு இறப்பு என்பது இருந்துக் கொண்டிருக்கிறது. பாதிப்புகளின் எண்ணிக்கை 1500 இந்த ஆண்டு கடந்து இருக்கிறது. இதற்கு முன்பு அரசு மருத்துவமனைகளில் சேர்பவர்களுக்கு மட்டுமே டெங்கு பாதிப்பு பத்திரிக்கைகளில் வெளியிடுவார்கள். இந்த அரசு அமைந்த பிறகு பொதுமக்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தனியார் மருத்துவமனைகளிலும் டெங்கு பாதிப்பு கணக்கெடுப்புக் கோரி அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் டெங்கு பாதிப்பு 1500 கடந்திருக்கிலாம். ஆனால் உயிரிழப்பு என்பது இந்தாண்டு இது வரை 9 பேர். இந்த 9 உயிரிழப்புகளும் பெரும்பகுதி இருதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் மற்றும் இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள், அதையும்கடந்து காய்ச்சல் பாதிப்பு அதிகமாக இருக்கும்போது மருத்துவமனைக்கு வராமல் மருத்துவர்களின் ஆலோசனை செய்யாமல் வீட்டிலேயே இருந்தவர்கள்.

இந்த வகையில் தான் 9 பேர் உயிரிழப்பு. சிறிய அளவிலான காய்ச்சல் பாதிப்பு என்றாலும் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான ஆலோசனை பெற்று மருந்து, மாத்திரைகள் எடுத்துக் கொள்வது நல்லது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



காஞ்சிபுரம் ஒன்றியம் கீழ்கதிர்பூர் தனியார் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் மாவட்டக் கழகச் செயலாளர் – உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டனர். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) திருமதி.அ. நளினி காஞ்சிபுரம் ஒன்றிய குழு தலைவர் திருமதி . மலர்க்கொடி குமார் மாவட்ட ஊராட்சிகுழ துணைத் தலைவர் திருமதி. நித்யா சுகுமார் ஆகியோர் உள்ளனர்.




சென்னையில் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் செயலாளர் அமித் யாதவ் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் தலைமையில் நேற்று (27.10.2025) 2026–2031 நிதி சுழற்சியாண்டுகளில் ஆதிதிராவிடர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும், அத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் சீரமைப்பு குறித்த பரிந்துரைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிவதற்கும் தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் ஒன்றிய அரசு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தலுங்கானா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட தென்மாநில தென்மாநில அளவிலான அளவிலான ஆய்வுக்கூ ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.